ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2447 - 2025 ජූලි මස 25 වැනි සිකුරාදා - 2025.07.25
2447 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 662 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 662 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

663 – B82704 - 5403 (2025/07)

# மாகாண சபை அறிவித்தல்கள்

### சப்பிரகமுவ மாகாண சபை

சப்பிரகமுவ கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவிப்பு

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கொண்ட மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவு உடன் வாசிக்க வேண்டிய (267 வது அதிகாரமாக இருந்த) களியாட்ட வரி சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது துணை பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி இரத்தினபுரி பிரதேச சபையால் அனுமதித்த சட்டத்தின் கீழ் கூறப்படும் பரிந்துரை, அந்த பிரிவின் (2) வது துணை பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மூலம் சப்பிரகமுவ மாகாண ஆளுநர் ஏ.ஏ சீ. ஜே. ராஜரத்ன என்கிற என் மூலம் அனுமதிக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கிறேன்.

ஏ. ஏ. சீ. ஜே. ராஜரத்ன,
சப்பிரகமுவ மாகாண ஆளுநர்.

சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,
2025, யூன் 09.

**தீர்மானம்**

2024.08.15 ஆம் திகதி செயலாளர் முடிவு செய்த இலக்கம் 08 ன் கீழ் அனுமதிக்கப்பட்டது.

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கொண்ட களியாட்ட வரி சட்டத்தின் படி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொண்ட பிரதேச சபை சட்டத்தின் இரத்தினபுரி பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி களியாட்ட வரி சட்டத்தின் 2 வது பிரிவின் (1) வது துணை பிரிவினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி . இரத்தினபுரி பிரதேச சபை ஆட்சி எல்லையில் ஒரு இடத்தில் நடாத்தி செல்லப்படும் திரைப்பட நிகழ்ச்சி, மாய வித்தை நிகழ்ச்சி, சர்கஸ் நிகழ்ச்சி, இசை நிகழ்ச்சி அல்லது காட்சிக்காக அச்சிடப்படும் நுழைவுச்சீட்டின் பெறுமதியில் 15% ஆக களியாட்ட வரி அறவிடப்பட வேண்டும் என இரத்தினபுரி பிரதேச சபை தீர்மானம் செய்கிறது.

07-829

---

# பதவிகள் - வெற்றிடம்

### மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையில் (சிவில்) விசேட தரத்திற்கு சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான பதவியுயர்வு

சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையில் (சிவில்) விசேட தரத்தில் நிலவும் 2021 ஆம் ஆண்டிற்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது பணிபுரியும் மற்றும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள கீழ்க் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவை (சிவில்) தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் கோரப்படுப்படும் இறுதித் திகதி : 2025.08.15

02. மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் 2016.04.04 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.3.1 ஆம் பிரிவில் விதந்துரைக்கப்பட்டுள்ள சதவீதத்தினை அடிப்படையாகக் கொண்டு மத்திய மாகாண இலங்கை தொழில்நுட்ப சேவை (சிவில்) விசேட தரத்திற்கு 2021.12.31 ஆம் திகதிக்கான சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் பதவியுயர்வு வழங்குவதற்கு நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையில் 2021 ஆம் ஆண்டிற்கான பதவியுயர்வுகள் வழங்கப்படும்.

03. 2021 ஆம் ஆண்டிற்கான பதவியுயர்வுகள் வழங்குவது தொடர்பில் சுவனத்திற் கொள்வதற்காக, உரிய விண்ணப்பதாரர்கள் 2021.12.31 ஆம் திகதியன்று கீழ்க் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப (MN-03) சேவைப் பிரிவின் தரம் I இல் குறைந்தது ஆறு (06) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அக்காலத்திற்குரிய சம்பள ஏற்றங்கள் ஆறு (06) இனையும் உழைத்துப் பெற்றிருத்தல் வேண்டும்.

II. பதவி உயர்வு வழங்கப்படும் திகதிக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்படாதிருத்தல் வேண்டும்.

III. அங்கீகரிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின் அடிப்படையில் பதவி உயர்வுத் திகதிக்கு உடன் முன்னரான ஆறு (6) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்திலான அல்லது அதனிலும் கூடிய மட்டத்திலான செயலாற்றுகைப் பெற்றிருத்தல் வேண்டும்.

IV. மூன்றாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

* (2013.06.01 ஆந் திகதிக்கு மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழில்நுட்ப சேவையின் தரம் I இற்கு தரமுயர்வு பெற்று (05) ஐந்து வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் III ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர்.

04. தரமுயர்வு வழங்கும் முறை

2013.06.01 ஆந் திகதி முதல் செல்லுபடியாகும் மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் சேவை அனுபவம் மற்றும் திறமைகளுக்காக வழங்கப்படும் புள்ளிகளின் பெறுபேறுகளுக்கமைய தேவையான ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதனை பரீட்சித்து உறுதிப்படுத்தியதன் பின்னர் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் மற்றும் நிலவும் வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் விசேட தரத்திற்கான தரமுயர்வுகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

05. விண்ணப்பதாரரினால் இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் 01 தொடக்கம் 12 வரையிலான பகுதிகளைப் பூரணப்படுத்த வேண்டியதுடன் நிறுவனத் தலைவரினால் விண்ணப்பதாரரின் ஆள்சார்புக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று தொடர்பான விடயங்கள், தண்டனைகள் / பாராட்டுக்கள் கண்டனங்கள் மற்றும் வலராற்றுத் தாள் என்பவற்றை மிக சரியாக பரிசீலித்து விண்ணப்பத்தின் இல. 13 தொடக்கம் 17 வரையிலான பகுதிகளைப் பூரணப்படுத்தி தனது பரிந்துரை மற்றும் திணைக்களத் தலைவர், அமைச்சுச் செயலாளர் மற்றும் மத்திய மாகாண பிரதான செயலாளர் ஆகியோரின் பரிந்துரைகளுடன் 2025.08.15 ஆந் திகதிக்கு முன்னர் இவ்வாணைக் குழுவுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

" செயலாளர்,
மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி."

06. சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் தரமுயர்த்துவதற்கான கட்டமைப்பு பரீட்சையின் போது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக பயன்படுத்தப்படும், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் எதிர்காலத்தில் பிரசுரிக்கப்படும்.

07. இப் பதவியுயர்வு தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் குறித்த சேவைப் பிரமாணக்குறிப்பின் ஏற்புகளுக்கமைய ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ், நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இது தொடர்பாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சார்ந்ததாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சுஜானி ஆர். விஜேதுங்க,
செயலாளர் (பதில்),
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாணம்.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.
2025, யூலை 22.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**மத்திய மாகாண தொழில்நுட்ப சேவையில் (சிவில்) விசேட தரத்திற்கு சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் 2021 ஆம் ஆண்டுக்கான பதவியுயர்வு**

1. I. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :……………………………………………………………………..
   II. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் : ………………………………………………………………………
   III. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :…………………………………………………..
   …………………………………………………………………………………………………………………………
2. பிரந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |
4. தொலைபேசி இலக்கம்: அலுவலக | | | | | | | | | | | |
   சுய | | | | | | | | | | | |
5. தற்போதைய சேவை நிலைய முகவரி : ……………………………………………………………………………….
6. சுய முகவரி : ………………………………………………………………………………………
7. சேவையிலிருந்து ஓய்வு பெற்றிருப்பின் :
   07.1. ஓய்வு பெற்ற திகதி : ……………………………………………………………………………………...
   07.2. சேவையாற்றிய நிறுவனம் : ……………………………………………………………………………………...
8. மத்திய மாகாண தொழில்நுட்ப சேவை (சிவில்) தரம் 1 இற்கு நியமிக்கப்பட்ட திகதி : ……………………………………….
9. தரம் 1 இற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 2021.12.31 ஆம் திகதி வரையான சேவைக் காலம் : ………………………
10. 2021.12.31 ஆம் திகதிக்கு வருடாந்த திரட்டிய சம்பளம் : …………………………………………………………………

11. 2021.12.31 ஆம் திகதிக்கு உடன் முந்திய 06 வருடத்தினுள் உழைத்து ஈட்டிய சம்பள ஏற்ற திகதிகள் மற்றும் வருடாந்த சம்பளப் படி,

| சம்பள ஏற்றத் திகதி | வருடாந்த சம்பளப் படி (ரூபாவில்) |
|---|---|
| 01. ……………………………… | 01. ……………………………… |
| 02. ……………………………… | 02. ……………………………… |
| 03. ……………………………… | 03. ……………………………… |
| 04. ……………………………… | 04. ……………………………… |
| 05. ……………………………… | 05. ……………………………… |
| 06. ……………………………… | 06. ……………………………… |

12. விண்ணப்பதாரரின் உறுதியுரை

இந்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனைத்து தகைமைகளையும் நான் கொண்டுள்ளேன் எனவும், இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் எனது அறிவு மற்றும் நம்பிக்கை அடிப்படையில் உண்மையானவை எனவும், மத்திய மாகாண தொழிநுட்ப சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள், அது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளின் அடிப்படையில் நான் தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில், நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் அல்லது நேர்முகப் பரீட்சையின் போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சார்த்தியுரிமை இரத்து செய்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு தீர்மானத்திற்கும் இணங்குகின்றேன் என்றும் இந்நேர்முகப் பரீட்சை நடாத்துதல் தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு மற்றும் நேர்முகப் பரீட்சைக் குழுவின் விதந்துரை அடிப்படையில் பதவியுயர்வு தொடர்பாக மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி :……………………………… ……………………………………………
உத்தியோகத்தரின் கையொப்பம்

தொடரிலக்கம் 13 தொடக்கம் 17 வரையிலான பகுதிகள் நிறுவனத் தலைவரினால் பூரணப்படுத்த வேண்டும்

13. 2021.12.31 ஆம் திகதியன்று வரையிலான முழு சேவைக் காலப் பகுதியில் சம்பளமற்ற லீவுகள் பெற்றிருப்பின் லீவுகளின் எண்ணிக்கை மற்றும் கால எல்லை :……………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

14. 2021.12.31 ஆம் திகதிக்கு உடன் முந்திய 06 வருட காலப்பகுதியில் செயலாற்றுகை அறிக்கையில் பாதகமான குறிப்புகள் ஏதேனும் பதியப்பட்டுள்ளதா ? ……………………………………………………………………………………

15. 2021.12.31 ஆம் திகதிக்கு உடன் முந்திய 06 வருட காலப்பகுதியில் அனைத்து சம்பள ஏற்றங்களும் ஈட்டப்பட்டுள்ளதா உழைத்துப் பெறப்படாத சம்பள ஏற்றங்கள் இருப்பின் அதற்கான காரணத்தினை குறிப்பிடுக. ………………………………
…………………………………………………………………………………………………………………….

16. இவ்வுத்தியோகத்தர் தனது முழு சேவைக் காலத்தினுள் யாதேனும் தவறான, முறையற்ற நேர்மையற்ற செயலில் ஈடுபட்டமைக்காக தண்டனை வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இருப்பின் அதன் தற்போதைய நிலைமை தொடர்பான விபரங்கள்?.
……………………………………………………………………………………………………………………...

17. மேலே 14 இல் குறிப்பிட்டுள்ள பாதகமான குறிப்பு அல்லது மேலே 16 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் உமது கண்காணிப்புகள் யாதேனும் உள்ளனவா? ஆம் எனின் விபரம்
……………………………………………………………………………………………………………………...
……………………………………………………………………………………………………………………...

நிறுவனத் தலைவரின் பரிந்துரை

திரு./ திருமதி / செல்வி ...................................................................................... ஆல் வழங்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் அவரது ஆள்சார்பும் கோவையுடன் பரீட்சிக்கப்பட்டு உறுதிசெய்யப்பட்டதுடன் அவர் 2021.12.31 ஆம் திகதிக்கு மத்திய மாகாண அரசாங்க சேவையின் தொழிநுட்ப சேவை (சிவில்) தரம் I இல் குறைந்தது ஆறு (06) வருட முனைப்பான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் எனவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கு ஆளாகவில்லை எனவும் மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து தகவல்களும் அவரது ஆள்சார்புக் கோவையின் அடிப்படையில் உண்மையாளவை என்றும் இவ்வலுவலருக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று தண்டனைகள் இல்லை எனவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும், எதிர் காலத்தில் அந்தகையை ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கவில்லை எனவும் 2021.12.31 ஆம் திகதிக்கு உடன் முந்திய 06 வருட காலப்பகுதியில் அனைத்து சம்பள ஏற்றங்களையும் எட்டியுள்ளார் எனவும் சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் விசேட தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் இவ்வலுவலர் பூர்த்தி செய்துள்ளார் எனவும் பரிந்துரைக்கின்றேன்/ பரிந்துரைக்கவில்லை.

திகதி :..................................

..................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகப்பூர்வ முத்திரை)

---

**திணைக்களத் தலைவரின் பரிந்துரை**

நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் நான் உடன்படுகிறேன் / உடன்படவில்லை. உரிய விண்ணபப்பபடிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி :..................................

..................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகப்பூர்வ முத்திரை)

---

**அமைச்சின் செயலாளரின் பரிந்துரை**

திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் நான் உடன்படுகிறேன் / உடன்படவில்லை. உரிய விண்ணபப்பபடிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன், பரிந்துரைக்கவில்லை

திகதி :..................................

..................................................
அமைச்சுச் செயலாளரின் கையொப்பம்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை
(உத்தியோகப்பபூர்வ முத்திரை)

---

**மாகாண பிரதான செயலாளரின் பரிந்துரை**

திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் நான் உடன்படுகிறேன் / உடன்படவில்லை உரிய விண்ணபப்பபடிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன், பரிந்துரைக்கவில்லை.

திகதி :..................................

..................................................
மாகாண பிரதான செயலாளரின் கையொப்பம்
உத்தியோகபூர்வ பதவி முத்திரை
(உத்தியோகப்பூர்வ முத்திரை)

07-837

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.